TNVR0D0000272024

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிவகாசி**

**முன்னிலை - செல்வி. க.பா. பவித்ரா ராஜம்., பி.பி.ஏ., எல்.எல்.பி., எல்.எல்.எம்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சிவகாசி

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 28 ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.20/2024**

TNVR0D0000272024

-----

B. அன்ஜும் செய்யது ..வாதி

/எதிர் /

ரியாஜ் ..பிரதிவாதி

இந்த வழக்கானது இறுதியாக என் முன்பாக 21.07.2026 அன்று விசாரணைக்காக வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K.அப்துல்பாரிக், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K.பாலமுருகன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

இஸ்லாமிய முறைப்படி வாதிக்கும், பிரதிவாதிக்கும் கடந்த 15.05.2022 ம் தேதியன்று சிவகாசி பிலால் திருமண மஹாலில் வைத்து நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும் மற்றும் வழக்கின் செலவுத் தொகையினை வாதிக்கு பிரதிவாதி செலுத்தக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கக் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

2. **வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்-**

**2.1.** வாதிக்கும், பிரதிவாதிக்கும் கடந்த 15.05.2022 ம் தேதியன்று சிவகாசி, நேரு ரஸ்தாவில் உள்ள பிலால் மஹாலில் வைத்து இரு வீட்டு பெரியோர்கள் உற்றார், உறவினர்கள் மற்றும் ஜமாத்தினர்கள் முன்னிலையில் இஸ்லாமிய முறைப்படி திருமணம் நடைபெற்றுள்ளது. மேற்படி திருமணமானது சிவகாசி சாபாஸ்கான் கோரி பள்ளிவாசல் முஸ்லீம் ஹனபீ மதஹபு ஜமாத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருமணத்தின் போது பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர் கேட்டுக்கொண்டதன் பெயரில் வாதிக்கு அவரது பெற்றோர் 27 பவுண் தங்க நகைகளும், பிரதிவாதிக்கு 2 பவுன் செயின் ஒரு பவுன் கைசெயினும், 1/2 பவுன் தங்க மோதிரமும் என 3 1/2 பவுன் தங்க நகைகள் வழங்கியுள்ளனர். அதுதவிர ரூ.74,000/-மதிப்புடைய இல்லறம் நடத்துவதற்கு தேவையான சீர்வரிசை பொருட்கள், பண்ட பாத்திரங்கள் ஆகியனவும், கட்டில், பீரோ ஆகியனவும் வாதிக்கு அவரது பெற்றோர் வழங்கினர். மேற்படி திருமணத்திற்கான செலவுகள் அனைத்தையும் வாதியின் பெற்றோர்தான் செலவு செய்துள்ளனர். மேற்படி உபய தரப்பினர்களின் திருமணம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட சமயத்தில் பிரதிவாதியானவர் M.Com. CA. படித்துள்ளதாகவும், அவர் சொந்தமாக CTP Machine ஆப்செட் மெஷின் வைத்து அச்சகம் நடத்தி வருவதாகவும், நன்கு வருமானம் ஈட்டி வருவதாகவும், நல்ல முறையில் வாதியை கவனித்துக் கொள்வதாகவும் உறுதியளித்ததன் பேரில் பிரதிவாதிக்கும் வாதிக்கும் திருமணம் உறுதிசெய்யப்பட்டது.

**2.2.** திருமணம் முடிந்து வாதியும், பிரதிவாதியும் கணவன் மனைவியாக பிரதிவாதியின் இல்லத்தில் வாழ்ந்து வந்தனர். பிரதிவாதியோ திருமணமான நாள் முதலே வாதியை சிறிதும் மதிக்காமலும், உதாசீனப்படுத்தியும் அவரை குறை கூறியும், வாதியை மனம் நோக செய்து வந்தார். பிரதிவாதியின் பெற்றோரும் வாதி செய்யும் செயல்களுக்கெல்லாம் குறை கூறி வந்துள்ளனர். இவர்கள் தவிர பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரியான ரேஷ்மா என்பவர் தூத்துக்குடியில்


PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

திருமணம் செய்து கொடுத்திருந்தாலும், அவர் அவரது கணவருடன் தூத்துக்குடியில் வசிக்காமல் பிரதிவாதியின் வீட்டில் இருந்து கொண்டு அவரும் சேர்ந்து வாதியை குறை கூறி வாதியைத் திட்டி வாதியை அழ செய்து வந்துள்ளார். வாதிக்கு மாதவிடாய் காலத்திலும் சிறிதும் ஓய்வு வழங்காமல், ஈவு இரக்கமின்றி அளவுக்கு அதிகமான வேலைகளை வழங்கி வாதியை, பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் துன்புறுத்தி உள்ளனர். இரவு நேரங்களில் பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் தாங்கள் பில்லி, சூனியம் மற்றும் மாந்திரக வேலையை கற்றுக் கொண்டவர்கள் என்றும், அதனைக் கொண்டு வாதிக்கும், அவரது குடும்பத்தாருக்கும் பாதிப்பு ஏற்படுத்தி விடுவோம் என்றும் கூறி வாதியை மிரட்டி வந்துள்ளனர். அதுமட்டுமில்லாமல் பிரதிவாதியும், பிரதிவாதியின் குடும்பத்தினரும் சேர்ந்து கேரளாவில் இருந்து மாந்திரகவாதிகளை வீட்டிற்கு அழைத்து ஒருவாரம் தங்கவைத்து. யாரோ ஒரு பெண்ணுக்கு பேய் பிடித்திருப்பதாக வரவழைத்து, அவருக்கு பேய் விரட்டுவதாகக்கூறி அந்த பெண்ணை அடித்து துன்புறத்தியுள்ளனர். அந்த மாந்திரகவாதிகளுக்கு. வாதியை உணவு சமைத்து கொடுக்குமாறும், அவர்களுக்கு கால் அமுக்கிவிடும்படியும், உணவு பரிமாரச் சொல்லியும் பிரதிவாதியும், அவரது பெற்றோரும் வற்புறத்தி கொடுமை செய்துள்ளனர். வாதி அதற்கு மறுப்பு தெரிவித்தபோது பிரதிவாதியின் தாயார் முட்டையை எடுத்து வாதியின் முகத்தில் எறிந்துள்ளார்.

**2.3.** பிரதிவாதியின் குடும்பத்தினர் வாதியை அவரது பெற்றோருடன் அலைபேசியில் கூட தொடர்பு கொள்வதற்கு அனுமதிப்பது கிடையாது. பிரதிவாதி குடும்பத்தினர் வாதியை ஒரு சிறைகைதி போல் நடத்தி வந்துள்ளனர். பிரதிவாதியும் அவர் குடும்பத்தினரும் செய்த கொடுமைகளை பொறுத்துக் கொண்டு நாளடைவில் பிரதிவாதியும், அவர் குடும்பத்தினரும் திருந்தி விடுவார்கள் எண்ணி வாதியானவர் பொறுமையாக வாழ்ந்து வந்தார். ஆனால் பிரதிவாதி மனைவியாகிய வாதிக்கு செய்ய வேண்டிய எந்த ஒரு அடிப்படை கடமைகளையும் செய்யாமலேயே இருந்து வந்தார். பிரதிவாதி, வாதியை தனது தேவைக்கு மட்டும் பயன்படுத்திக் கொண்டு அதன் பின் மற்ற நேரங்களில் மனம் நோக பேசி வெறுத்து ஒதுக்கி வந்தார். பிரதிவாதி, வாதியை வீட்டை



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

விட்டு எங்கும் அழைத்துச் சென்றது கிடையாது. இந்நிலையில் வாதிக்கும், பிரதிவாதிக்கும் இருந்த இல்லறத்தின் பயனாக வாதியானவர் கர்ப்பம் தரித்தார். ஒரு கர்ப்பிணிப் பெண் என்று கூட பாராமல் பிரதிவாதியும் அவர் குடும்பத்தினரும், வாதிக்கு அளவுக்கு அதிகமாக தொல்லைகள் கொடுக்க ஆரம்பித்தனர். பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தாரின் கொடுமைகளால் தனது வயிற்றில் இருக்கும் குழந்தைக்கும், தனக்கும் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டு விடும் என வாதி மிகவும் அஞ்சி வாழ்ந்து வந்தார். இந்நிலையில் வாதிக்கு காய்ச்சல் ஏற்பட்டு உடல்நலம் குன்றியபோது பிரதிவாதியும், அவரது குடும்பத்தினரும் வாதியை மருத்துவமனை அழைத்து செல்லாமல், ஓதினால் சரியாகிவிடும் என்று கூறி, இரவு முழுவதும் வாதியை உட்கார வைத்து, அவரது முகத்தில் தண்ணீர் அடித்து ஓதியுள்ளார்கள். இதனால் வாதிக்கு காய்ச்சல் குறையாமல் மிகவும் அதிகமாகிவிட்டது. பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினரின் செய்கையால் தனது உயிருக்கே ஆபத்தாகிவிடும் என அஞ்சி வாதியானவர், தனது தந்தைக்கு தகவல் தெரிவித்து உடனடியாக வரவழைத்துள்ளார். பிரதிவாதியின் வீட்டிற்கு வந்த வாதியின் தந்தை வாதியை மருத்துவமனை அழைத்து சென்றுள்ளார். அதன்பின் வாதியின் தந்தை வாதியிடம் குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று வாதியை தேற்றி, மீண்டும் பிரதிவாதியின் வீட்டிற்கு கொண்டு சென்று வாதியை விட்டுள்ளார். அவ்வாறு சென்ற போது பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர் இங்கு நடந்த விபரங்களை ஏன் உன் அப்பாவிடம் கூறினாய் எனக்கேட்டு, வாதியை மிகவும் மதிப்பு குறைவாகவும், அவதூறாகவும் திட்டி, அடித்து, சாப்பாடு போடாமல் கொடுமைப்படுத்தியுள்ளார்கள். இதனால் உயிருக்கு பயந்து கடந்த 03.12.2022 வாதியானவர் தனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார். அவ்வாறு பெற்றோர் வீட்டிற்கு வாதி வந்த பின் பிரதிவாதி வாதி அலைபேசியில் தொடர்பு கொண்டு, நீ எவன்கூட சென்றுவிட்டாய் என்றும், மிகவும் அறுவருக்கத்தக்க வார்த்தைகளாலும், ஆபாசமான வார்த்தைகளாலும் பேசி வாதியை மனம் நோக செய்துள்ளார்.



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

**2.4.** பிரதிவாதியின் வீட்டிலிருந்து வாதி நான்கு மாத கர்ப்பிணியாக பெற்றோர் வீட்டிற்கு வந்துள்ளார். கர்ப்பிணியான வாதியை பிரதிவாதியோ அவர் குடும்பத்தினரோ வந்து பார்க்கவில்லை. வாதியின் பெற்றோர் வாதியை மருத்துவமனை அழைத்துச் சென்று நல்ல முறையில் கவனித்து வந்தனர். வாதிக்கு கடந்த 10.06.2023 தேதியன்று ஆலியா என்ற ஓர் பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த விபரத்தை தெரிவித்த பின்னரும் கூட பிரதிவாதியோ அவரது குடும்பத்தினரோ நாளது தேதி வரை வாதியையோ, குழந்தையையோ பார்க்க வரவில்லை. வாதிக்கு குழந்தை பிறந்த பிறகு 31.07.2023 தேதியன்று வாதியின் பெற்றோரும், வாதியின் பெரியப்பா அபுபக்கர் அவர்களும் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று வாதியையும், பிரதிவாதியையும் சேர்த்து வைக்க சமாதானமாக பேசினர். ஆனால் பிரதிவாதியும், அவரது குடும்பத்தினரும் சமாதானம் பேச வந்த வாதியின் குடும்பத்தினரை மிகவும் இழிவாக பேசி திட்டியதோடு மட்டுமில்லாமல் இனிமேல் சமாதானம் என்று கூறிக்கொண்டும் வரும் பட்சத்தில், அவர்களது மீது பொய்யாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு போட்டுவிடுவோம் என்றும் மிரட்டி அனுப்பிவிட்டனர்.

**2.5.** பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினரின் செய்கையால் மனமுடைந்து போன வாதி தனக்கு நிகழ்ந்த கொடுமைகள் குறித்து விருதுநகர் மாவட்ட சமூக நல அலுவலர் அவர்கள் வசம் கடந்த 03.08.2023 ம் தேதியன்று ஓர் புகார் மனு வழங்கினார். அந்த புகார் மனுவின் விசாரணைக்கு ஆஜயாகிய பிரதிவாதி மேற்படி சமூக அலுவலர் முன்னிலையில் வீணாக தகராறு செய்து. மேற்படி மனுவின் விசாரணையை மேற்கொள்ள இயலாமல் தாவா செய்தார். மனுவின் விசாரணையானது ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மாவட்ட சமூக அலுவலர் அவர்கள் உடல்நலக்குறைவால் விடுப்பில் சென்றுவிட்டார். அதனால் மேற்படி மனுவானது எவ்வித மேல்நடவடிக்கையும் இல்லாமல் நிலுவையில் இருந்து வருகிறது. பிரதிவாதி கியு பிளோட் சிஸ்டம் என்ற பெயரில் சொந்தமாக நிறுவனம் நடத்தி மாதம் ரூ.1,00,000/-திற்கும் அதிகமாக வருமானம் ஈட்டி ஆடம்பரமாக வாழ்ந்து வருகிறார். அவ்வாறிருந்தும் பிரதிவாதியின் வீட்டில் இருந்த வாதிக்கு சொந்தமான நகைகளையும்,



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

சீர்வரிசை பொருட்களையும் வாதிக்கு தர பிரதிவாதியும், அவரது குடும்பத்தினரும் முன்வரவில்லை. அதனால் வாதி, பிரதிவாதி வசம் இருந்த தனக்கு பாத்தியப்பட்ட நகைகள், சீர்வரிசை பொருட்கள் யாவற்றையும் பெற்றுத் தருமாறு கோரி சிவகாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 22.01.2024 ம் தேதியன்று புகார் செய்தார். அந்த புகார் மனுவிற்கு காவல்நிலையத்தில் மனு ரசீது எண் 56/2024 என வழங்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்த விசாரணைக்கு ஆஜராகிய பிரதிவாதி, வாதிக்குப் பாத்தியப்பட்ட நகைகளையும், துணிகளையும் மட்டுமே காவல் நிலையத்தில் வைத்து வாதி வசம் கடந்த 23.01.2024 ம் தேதியன்று ஒப்படைத்தார். ஆனால் வாதிக்கு சொந்தமான பாத்திரங்கள், கட்டில், பீரோ ஆகியவை பிரதிவாதியிடமே உள்ளது.

**2.6.** பிரதிவாதி நிகழ்த்திய கொடுமைகள் காரணமாக தற்போது வாதி அவரது பெற்றோர் வீட்டில் சுமார் ஓர் ஆண்டு காலமாக பெற்றோருக்கு பாரமாக வாழ்ந்து வருகிறார். அது தவிர வாதி தனது ஆறு மாத கைக்குழந்தையுடன் தனது பெற்றோர் வீட்டில் மிகுந்த கஷ்ட ஜீவனமும் செய்து வருகிறார். பிரதிவாதியாவனர் வாதி மீதும், குழந்தை மீதும் சிறிதும் அக்கறை இல்லாமல் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வருகிறார். பிரதிவாதியின் செய்கையினால் வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே இருந்த திருமண உறவானது முற்றிலும் முறிந்து விட்டது. இனியும் வாதியும், பிரதிவாதியும் சேர்ந்து வாழ்வதற்கான சாத்திய கூறுகள் எதும் இல்லை. ஒருவேளை வாதி, பிரதிவாதியுடன் சேர்ந்து வாழும் பட்சத்தில் அது வாதியின் உயிருக்கே ஆபத்தாக முடியக்கூடும் என வாதி மிகவும் அஞ்சுகிறார். எனவே, தாவா வழக்கு தாக்கல்.

3. **பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்-**

**3.1.** பிரதிவாதியால் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர வாதியின் பிராதில் கண்ட ஏனைய பிற சங்கதிகள் யாவும் தவறானவை என்றும், அவற்றில் சிறிதும் உண்மை ஏதும் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார். அவற்றினை நிரூபிக்க வேண்டிய கடமைகள் யாவும் மேற்படி வாதியையே சார்ந்ததாகும். அசல் வழக்கானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும்



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

நிலைநிற்கத்தக்கதல்ல. தாவா வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் ஏதும் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மேலும் சரியான இஸ்லாமிய சட்டப்பிரிவின் கீழ் தாவா வழக்கு தாக்கல் செய்யப்படாத ஒரே காரணத்திற்காகவே தாவா வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். உண்மையில் வாதியின் தந்தையும், பிரதிவாதியின் தந்தையும், பல ஆண்டு காலமாக நெருங்கிய நண்பர்களாக இருந்து வந்துள்ளனர். அந்த பழக்கத்தின் காரணமாக வாதியின் தந்தை பிரதிவாதியை, வாதிக்கு மணம் முடிக்க மிகவும் வேண்டிக்கேட்டுக்கொண்டதன் பேரில் பிரதிவாதியின் குடும்பத்தினர் மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். அதனைத்தொடர்ந்து வாதிக்கும், பிரதிவாதிக்கும் இஸ்லாமிய முறைப்படி 15.05.2022 ம் தேதியன்று சிவகாசி பிலால் மஹாலில் வைத்து திருமணம் நடைபெற்றுள்ளது. மேற்படி திருமணத்தின் போது வாதிக்கு அவரது பெற்றோர்கள் அவர்ளாக விரும்பி நகைகள் அணிவித்துள்ளனர். எவ்வளவு நகைகள் வாதி அணிந்து வந்தார் என்பது குறித்து பிரதிவாதிக்கோ, அவரது குடும்பத்தினருக்கோ நாளது தேதிவரை ஏதும் தெரியாது. நகைகள் தவிர சீர்வரிசையாக வாதிக்கு, கட்டில், மெத்தை, பீரோ மட்டும் வாதியின் பெற்றோர் வழங்கினர். பண்ட பாத்திரங்கள் ஏதும் வாதிக்கு அவரது பெற்றோர் வழங்கவில்லை. திருமண சமயத்தில் பி.காம்., சி.ஏ., முடித்திருந்த பிரதிவாதி அவரது தந்தைக்கு பாத்தியப்பட்ட அச்சகத்தில் பணிபுரிந்து வந்துள்ளார்.

**3.2.** வாதி தெரிவித்திருப்பது போல் பிரதிவாதியோ, அவரது குடும்பத்தினரோ பில்லி சூனியம் என்று கூறி வாதியை மிரட்டியது கிடையாது. மாந்திரகவாதி எவரையும் வீட்டிற்கும் அழைத்து வந்ததும் கிடையாது. வாதி எப்போதும் அவரது பெற்றோருடன் அலைபேசியில் பேசிக்கோண்டேதான் இருப்பார். பிரதிவாதியோ, அவரது குடும்பத்தினரோ அதற்கு மறுப்பு ஏதும் தெரிவித்தது கிடையாது. வாதியின் தந்தை அடிக்கடி வாதியை சந்தித்து செல்வார். வாதியும், அவரது பெற்றோர் வீட்டிற்கு அடிக்கடி சென்றுவருவார். வாதி திருமணமான நாள் முதலே பிரதிவாதியின் வீட்டில் வீட்டு வேலைகள் ஏதும் செய்யாமல், அலைபேசியில் எப்போதும் பேசிக்கொண்டே



PAVITHRA RAJAM
Digitally signed by PAVITHRA RAJAM

இருப்பார். பிரதிவாதிக்கு செய்யவேண்டிய எந்தவொரு அடிப்படைக்கடமைகளையும் வாதி செய்வது கிடையாது. அவ்வாறிருந்தும் பிரதிவாதியோ, அவரது பெற்றோரோ வாதியை குறைகூறியதோ, மனம் நோக பேசியதோ கிடையாது. வாதி கர்ப்பம் தரித்தவுடன் வாதியை பிரதிவாதி சிவகாசி மேனகா மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு பலமுறை அழைத்து சென்று வந்துள்ளார். வாதி கேட்கும் பொருட்களை எல்லாம் பிரதிவாதி வாங்கிக்கொடுத்துள்ளார். ஆனால் வாதியோ, பிரதிவாதி மீது சிறிதும் பற்றும் பாசமும் இல்லாமல் வெறும் பெயரளவிற்கு மட்டும் வாழ்ந்து வந்துள்ளார்.

**3.3.** வாதி தமக்கு உடல்நலம் சரியில்லை என்றும், அதனால் அவரது தந்தையுடன் மருத்துவமனைக்கு செல்லப்போவதாகவும் 2022 நவம்பர் மாத இறுதியில் தெரிவித்துள்ளார். பிரதிவாதி தான் மருத்துவமனை அழைத்து செல்வதாக கூறியதற்கு வாதி வர மறுத்துவிட்டார். அதன்பின் வாதி அவரது தந்தையை வரவழைத்து மருத்துவமனை சென்று வந்தார். அவ்வாறு சென்று வந்த பின் வாதி, பிரதிவாதி மற்றும் பிரதிவாதி பெற்றோரை சிறிதும் மதிக்காமல் அவர்களுடன் வீணாக அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளார். பிரதிவாதியை மிகவும் மதிப்பு குறைவாக பேசி வந்தார். அந்த சூழ்நிலையில் வாதியின் தந்தை கடந்த 03.12.2022 தேதியன்று வாதியை ஓய்விற்காக என்று கூறி அவரது வீட்டிற்கு அழைத்து சென்றார். அவ்வாறு அழைத்து செல்லப்பட்ட வாதியை அலைபேசியில் தொடர்பு கொள்ள பிரதிவாதி முயன்ற போது வாதி பிரதிவாதியுடன் பேச முன்வரவில்லை. பிரதிவாதி நேரில் சென்று வாதியை சந்திப்பதற்கு முயன்றபோதும் வாதி பிரதிவாதியை சந்திக்க முன்வரவில்லை. பிரதிவாதியின் தந்தை குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று தெரிவித்து பிரதிவாதியை அனுப்பிவிட்டார். பலமுறை வாதியை தொடர்பு கொள்ள பிரதிவாதி முயன்றபோதும், பிரதிவாதி வாதியை நேரிலோ, அலைபேசியிலோ தொடர்பு கொள்ள முன்வரவேயில்லை. வாதிக்கு குழந்தை பிறந்த விபரத்தை பிரதிவாதிக்கோ, அவரது குடும்பத்தினருக்கோ வாதியின் குடும்பத்தினர் தெரிவிக்கவில்லை. அவ்வாறு இருந்தும் குழந்தை பிறந்த விபரம் அறிந்து பிரதிவாதியும், அவரது குடும்பத்தினரும்



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

வாதியையும், குழந்தையையும் பார்ப்பதற்கு சென்றபோது வாதியின் பெற்றோர் குழந்தையையும், வாதியையும் பார்ப்பதற்கு அனுமதிக்காமல் திருப்பி அனுப்பிவிட்டனர். வாதியின் தந்தை தமக்கு மிகவும் கஷ்டமாக உள்ளது என்றும், அதனால் மாதம்தோறும் தனக்கு ரூ.15,000/- பிரதிவாதி வழங்கும் பட்சத்தில் வாதியை பிரதிவாதியின் வீட்டிற்கு அனுப்பி வைப்பதாகவும், இல்லாத பட்சத்தில் அனுப்ப இயலாது என்றும் அலைபேசியில் தெரிவித்தார். அது கேட்டு பிரதிவாதி மிகுந்த அதிர்ச்சிக்கு ஆளாகினார். வாதியின் தந்தை கோரிய பிரகாரம் பணம் வழங்க முடியாது என்பதை வாதியின் தந்தை வசம் பிரதிவாதி தெரிவித்துவிட்டார். இதனால் வாதியின் தந்தை, வாதியை தூண்டிவிட்டு, அதன்பேரில் வாதி இல்லாத பொல்லாத சங்கதிகளை தெரிவித்து விருதுநகரில் அமைந்துள்ள சமூக நல அலுவலர் அவர்கள் வசம் வாதி பொய்யாக ஒரு புகார் மனு அளித்தார். அந்த புகார் மனுவில் ஆஜராகிய பிரதிவாதி அவர் தரப்பு விளக்கத்தை தெளிவாக எழுத்து மூலமாக எடுத்துரைத்தார். அந்த எழுத்துமூல விளக்கத்தில் வாதியின் தந்தைக்கு மாதம்தோறும் ரூ.15,000/- வழங்கும் பட்சத்தில் மட்டுமே வாதியை பிரதிவாதியின் வீட்டிற்கு அனுப்புவேன் என வாதியின் தந்தை தெரிவித்த விபரத்தை தெளிவாக குறிப்பிட்டிருந்தார். மேலும் பிரதிவாதி வாதியுடன் சேர்ந்து வாழ தான் தயாராக இருப்பதையும் அதில் எடுத்துரைத்திருந்தார். மேற்படி மனு நிலுவையில் இருக்கும் சமயத்தில் பிரதிவாதி வாதியின் குடும்பத்திற்கு வேண்டப்பட்ட நபர்கள் மூலமாக சுமூகமாக பேச்சு வார்த்தை நடத்தி வாதியை தம்முடன் சேர்ந்து வாழ்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டார். ஆனால் வாதியின் தந்தை மற்றும் சகோதரர் சமரச பேச்சு வார்த்தைக்கு வரவில்லை. மாறாக வாதியின் சகோதரர் பொது இடத்தில் பிரதிவாதியை மதிப்பு குறைவாக மிகவும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தினார். அதனையும் பிரதிவாதி பொறுத்துக்கொண்டார்.

**3.4.** வாதி சிவகாசி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் பிரதிவாதி மீது புகார் செய்தார். அந்த புகார் மனுவில் ஆஜராகிய பிரதிவாதி தான் வாதியுடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதை


PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

எடுத்துரைத்தார். ஆனால் வாதியும், அவரது பெற்றோரும் பிரதிவாதியின் வீட்டில் இருந்த வாதியின் நகைகளை ஒப்படைக்கக்கோரினர். எவ்வித மறுப்பும் இல்லாமல் பிரதிவாதி வாதியின் நகைகளை ஒப்படைத்தார். வாதிக்கு சொந்தமான கட்டில், மெத்தை, பீரோ ஆகியவற்றையும் வாதியின் தந்தை கோரினார். அவற்றையும் எப்போது வேண்டுமானாலும் எடுத்து செல்லுமாறு பிரதிவாதி தெரிவித்துவிட்டார். ஆனால் பிரதிவாதி தந்தை இதுவரை எடுத்து செல்லாமல் உள்ளார். பிரதிவாதி தன்னையும், வாதியையும் சேர்த்து வைக்கக்கோரி ஜமாத்தில் முறையிட்டார். ஜமாத்தார்கள் சமரச பேச்சுவார்த்தைக்கு வாதியையும் அவரது பெற்றோரையும் அழைத்தனர். அவர்கள் சமரச பேச்சு வார்த்தைக்கு வரமறுத்து பொய்யான காரணங்கள் கூறி தாவா வழக்கினைத் தாக்கல் செய்துள்ளனர். வாதிக்கு விவாகரத்து வழங்க பிரதிவாதிக்கு சிறிதும் உடன்பாடு கிடையாது. திருமணத்தின் போது வாதிக்கு வழங்கப்பட்ட மஹர் வாதி வசம் இருந்து வருகிறது. ஆகவே, வாதி தாக்கல் செய்துள்ள தாவா வழக்கினை பிரதிவாதி தரப்பு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டப்படுகிறது.

**4. எழுவினாக்கள்-**

1. வாதியின் வழக்கு நிலைநிற்கத்தக்கதா?

2. வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையிலான திருமணத்தை செல்லாது என அறிவிப்பதற்கான காரணங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளவா?

3. வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

4. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

**5. சாட்சிகள்-**

வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.1 ன் மூலம் பி.வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.


PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

**6. 1ம் எழுவினா பேரிலான தீர்வு-**

**6.1.** வழக்கு பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பு வாதுரைக்கு கால அவகாசம் அளிக்கப்பட்டது. வாதியின் வழக்கு யாதெனில், வாதிக்கும் பிரதிவாதிக்கும் கடந்த 15.05.2022 ம் தேதியன்று சிவகாசி நேரு ரஸ்தாவில் உள்ள பிலால் மஹாலில் வைத்து இருவீட்டு பெரியோர்கள் மற்றும் உற்றார் உறவினர்கள், ஜமாத்தினர்கள் முன்னிலையில் இஸ்லாமிய முறைப்படி திருமணம் நடைபெற்றுள்ளது. மேலும் மேற்படி திருமணமானது சிவகாசி சாபாஸ்கான் கோரி பள்ளிவாசல் முஸ்லிம் ஹனபி மதஹபு ஜமாத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருமணத்தின் போது பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் கேட்டுக்கொண்டதிற்கிணங்க, வாதிக்கு 27 பவுன் தங்க நகைகளும், பிரதிவாதிக்கு 2 பவுன் செயின், ஒரு பவுன் கைச்செயினும், அரை பவுன் தங்க மோதிரமும் என மூன்றரை பவுன் தங்க நகைகள் வழங்கப்பட்டன. மேலும் ரூ.74,000/- மதிப்பிலான சீர்வரிசை பொருட்கள் வாதிக்கு அவரது பெற்றோர்களால் வழங்கப்பட்டது. திருமணத்தின் செலவினையும் வாதியின் பெற்றோர்களை ஏற்றுள்ளனர். திருமண பேச்சுவார்த்தை சமயத்தில் பிரதிவாதியானவர் M.Com.CA., படித்திருப்பதாகவும், அவர் சொந்தமாக CTP Machine, ஆப்செட் மிஷின் வைத்து அச்சகம் நடத்தி வருவதாகவும், நன்கு வருமானம் ஈட்டி வருவதாலும், வாதியை நல்லபடியாக கவனித்துக் கொள்வதாகவும் உறுதி அளித்ததனால் வாதியை பிரதிவாதிக்கு திருமணம் முடித்து வைத்தனர் என்றும், திருமணம் முடிந்த நாளிலிருந்தே பிரதிவாதியானவர் வாதியை மதிக்காமலும், உதாசீனப்படுத்தியும், குறை கூறியும் வாதியின் மனம் நோகும் வகையில் நடந்து கொண்டதாகவும், பிரதிவாதியின் பெற்றோர்களும் வாதி செய்யும் செயல்களுக்கெல்லாம் குறை கூறி வந்தனர் என்றும், பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரியான ரேஷ்மா என்பவர் திருமணம் முடிந்த பின்பும் பிரதிவாதியின் வீட்டிலிருந்துகொண்டு வாதியை குறைகூறி, வாதியைத் திட்டி, அழவைப்பதை வாடிக்கையாக கொண்டுள்ளனர் என்றும் வாதிக்கு மாதவிடாய் காலத்திலும் சிறிதும் ஓய்வு வழங்காமல், ஈவு இரக்கமின்றி அளவுக்கு அதிகமான வேலைகளை வழங்கி வாதியை, பிரதிவாதியும்



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

அவரது குடும்பத்தினரும் துன்புறுத்தினார் என்றும் இரவு நேரங்களில் பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் தாங்கள் பில்லி, சூனியம் மற்றும் மாந்திரக வேலையை கற்றுக் கொண்டவர்கள் என்றும், அதனைக் கொண்டு வாதிக்கும், அவரது குடும்பத்தாருக்கும் பாதிப்பு ஏற்படுத்தி விடுவோம் என்றும் கூறி வாதியை மிரட்டி வந்துள்ளனர்.

**6.2**. மேலும் பிரதிவாதியும், பிரதிவாதியின் குடும்பத்தினரும் சேர்ந்து கேரளாவில் இருந்து மாந்திரகவாதிகளை வீட்டிற்கு அழைத்து ஒருவாரம் தங்கவைத்து, யாரோ ஒரு பெண்ணுக்கு பேய் பிடித்திருப்பதாக வரவழைத்து, அவருக்கு பேய் விரட்டுவதாகக்கூறி அந்த பெண்ணை அடித்து துன்புறத்தியுள்ளனர் என்றும் அந்த மாந்திரகவாதிகளுக்கு வாதியை உணவு சமைத்து கொடுக்குமாறும், அவர்களுக்கு கால் அமுக்கிவிடும்படியும், உணவு பரிமாரச் சொல்லியும் பிரதிவாதியும், அவரது பெற்றோரும் வற்புறத்தி கொடுமை செய்துள்ளனர் என்றும் வாதி அதற்கு மறுப்பு தெரிவித்தபோது பிரதிவாதியின் தாயார் முட்டையை எடுத்து வாதியின் முகத்தில் எறிந்துள்ளார் என்றும் பிரதிவாதி மனைவியாகிய வாதிக்கு செய்ய வேண்டிய எந்த ஒரு அடிப்படை கடமைகளையும் செய்யாமலேயே இருந்து வந்தார் என்றும் வாதிக்கும், பிரதிவாதிக்கும் இருந்த இல்லறத்தின் பயனாக வாதியானவர் கர்ப்பம் தரித்தார். ஒரு கர்ப்பிணிப் பெண் என்று கூட பாராமல் பிரதிவாதியும் அவர் குடும்பத்தினரும், வாதிக்கு அளவுக்கு அதிகமாக தொல்லைகள் கொடுக்க ஆரம்பித்தனர். பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தாரின் கொடுமைகளால் தனது வயிற்றில் இருக்கும் குழந்தைக்கும், தனக்கும் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டு விடும் என வாதி மிகவும் அஞ்சி வாழ்ந்து வந்தார். இந்நிலையில் வாதிக்கு காய்ச்சல் ஏற்பட்டு உடல்நலம் குன்றியபோது பிரதிவாதியும், அவரது குடும்பத்தினரும் வாதியை மருத்துவமனை அழைத்து செல்லாமல், ஓதினால் சரியாகிவிடும் என்று கூறி, இரவு முழுவதும் வாதியை உட்கார வைத்து, அவரது முகத்தில் தண்ணீர் அடித்து ஓதியுள்ளார்கள் என்றும் இதனால் வாதிக்கு காய்ச்சல் குறையாமல் மிகவும் அதிகமாகிவிட்டது.



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

**6.3.** பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினரின் செய்கையால் தனது உயிருக்கே ஆபத்தாகிவிடும் என அஞ்சி வாதியானவர், தனது தந்தைக்கு தகவல் தெரிவித்து உடனடியாக வரவழைத்துள்ளார் என்றும் பிரதிவாதியின் வீட்டிற்கு வந்த வாதியின் தந்தை வாதியை மருத்துவமனை அழைத்து சென்றுள்ளார் என்றும் அதன்பின் வாதியின் தந்தை வாதியிடம் குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று வாதியை தேற்றி, மீண்டும் பிரதிவாதியின் வீட்டிற்கு கொண்டு சென்று வாதியை விட்டுள்ளார் என்றும் அவ்வாறு சென்ற போது பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர் இங்கு நடந்த விபரங்களை ஏன் உன் அப்பாவிடம் கூறினாய் எனக்கேட்டு, வாதியை மிகவும் மதிப்பு குறைவாகவும், அவதூறாகவும் திட்டி, அடித்து, சாப்பாடு போடாமல் கொடுமைப்படுத்தியுள்ளார்கள் என்றும் இதனால் உயிருக்கு பயந்து கடந்த 03.12.2022 வாதியானவர் தனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார். அவ்வாறு பெற்றோர் வீட்டிற்கு வாதி வந்த பின் பிரதிவாதி வாதி அலைபேசியில் தொடர்பு கொண்டு, நீ எவன்கூட சென்றுவிட்டாய் என்றும், மிகவும் அறுவருக்கத்தக்க வார்த்தைகளாலும், ஆபாசமான வார்த்தைகளாலும் பேசி வாதியை மனம் நோக செய்துள்ளார். வாதிக்கு கடந்த 10.06.2023 தேதியன்று ஆலியா என்ற ஓர் பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த விபரத்தை தெரிவித்த பின்னரும் கூட பிரதிவாதியோ அவரது குடும்பத்தினரோ நாளது தேதி வரை வாதியையோ, குழந்தையையோ பார்க்க வரவில்லை. பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினரின் செய்கையால் மனமுடைந்து போன வாதி தனக்கு நிகழ்ந்த கொடுமைகள் குறித்து விருதுநகர் மாவட்ட சமூக நல அலுவலர் அவர்கள் வசம் கடந்த 03.08.2023 ம் தேதியன்று ஓர் புகார் மனு வழங்கினார் என்றும் அந்த புகார் மனுவின் விசாரணைக்கு ஆஜயாகிய பிரதிவாதி மேற்படி சமூக அலுவலர் முன்னிலையில் வீணாக தகராறு செய்து மேற்படி மனுவின் விசாரணையை மேற்கொள்ள இயலாமல் தாவா செய்தார் என்றும் வாதி, பிரதிவாதி வசம் இருந்த தனக்கு பாத்தியப்பட்ட நகைகள், சீர்வரிசை பொருட்கள் யாவற்றையும் பெற்றுத் தருமாறு கோரி சிவகாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 22.01.2024 ம் தேதியன்று புகார் செய்தார்



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

என்றும் அந்த புகார் மனுவிற்கு காவல்நிலையத்தில் மனு ரசீது எண்.56/2024 என வழங்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றும் அந்த விசாரணைக்கு ஆஜராகிய பிரதிவாதி, வாதிக்குப் பாத்தியப்பட்ட நகைகளையும், துணிகளையும் மட்டுமே காவல் நிலையத்தில் வைத்து வாதி வசம் கடந்த 23.01.2024 ம் தேதியன்று ஒப்படைத்தார் என்றும் ஆனால் வாதிக்கு சொந்தமான பாத்திரங்கள், கட்டில், பீரோ ஆகியவை பிரதிவாதியிடமே உள்ளது என்றும் பிரதிவாதியின் செய்கையினால் வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே இருந்த திருமண உறவானது முற்றிலும் முறிந்து விட்டது என்றும் இனியும் வாதியும், பிரதிவாதியும் சேர்ந்து வாழ்வதற்கான சாத்திய கூறுகள் எதும் இல்லை என்றும் ஒருவேளை வாதி, பிரதிவாதியுடன் சேர்ந்து வாழும் பட்சத்தில் அது வாதியின் உயிருக்கே ஆபத்தாக முடியக்கூடும் என வாதி மிகவும் அஞ்சுகிறார் என்றும் பிராதில் கூறப்பட்டுள்ளது.

**6.4.** பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில், வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர, மற்றவையாவும் பொய்யென மறுக்கப்படுகிறது என்றும், அதனை நிரூபிக்க வேண்டிய கடமை வாதி வசமே உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. வாதி சரியான இஸ்லாமிய சட்டப்பிரிவின் கீழ் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், இஸ்லாமிய சட்டப்படி கணவன் மனைவிக்குள் ஏற்படும் தாவா குறித்து முதலில் ஜமாத்தில் தான் முறையிட வேண்டும் என்றும், அங்கு தீர்வு காணப்படாத நிலையில் மட்டுமே நீதிமன்றத்தை நாட வேண்டும் என்றும், ஆனால் இஸ்லாமிய விதிகளுக்கு முரணாக வாதி நேரடியாக வழக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதால், மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. கடந்த 15.02.2022 ம் தேதி சிவகாசி நேரு ரஸ்தாவில் உள்ள பிலால் மஹாலில் வைத்து வாதி மற்றும் பிரதிவாதியின் பெற்றோர்கள், உற்றார் உறவினர்கள் மற்றும் ஜமாத்தினர்கள் முன்னிலையில் இஸ்லாமிய முறைப்படி திருமணம் நடைபெற்றது என்பதும், மேற்படி திருமணமானது சிவகாசி சபஸ்கான் கோரி பள்ளிவாசல் முஸ்லிம் ஹனபி மதஹபூ ஜமாத்தில் பதிவு


PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

செய்யப்பட்டது என்பதும் உண்மை என்றும், பிரதிவாதி B.Com.,CA., படித்துள்ளார் என்பதும் உண்மை என்றும். ஒப்புக்கொள்ளப்படுகிறது. மேலும் பிரதிவாதி B.Com.,CA., படித்துள்ளார் என்ற விவரம் வாதியின் குடும்பத்திற்கு நன்கு தெரியும் என்றும், திருமணம் நிச்சயக்கப்பட்ட சமயத்திலும், அதற்கு முன்பும், திருமணத்திற்குப் பின்பும், நாளது தேதி வரை பிரதிவாதி அவரது தந்தை நடத்திவரும் அச்சகத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வருகிறார் என்ற விவரம் வாதிக்கும் அவரது தந்தைக்கும் நன்கு தெரியும் என்றும், வாதியும் பிரதிவாதியும் கணவன் மனைவியாக பிரதிவாதியின் இல்லத்தில் வாழ்ந்து வந்தனர் என்பது உண்மை என்றும், ஆனால் வாதியை பிரதிவாதியும் அவரது பெற்றோர்களும், சகோதரியும் மதிக்காமலும் குறைகூறியும் வந்தனர் என்பது மறுக்கப்படுகிறது என்றும் கூறப்பட்டுள்ளது. வாதியை பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் துன்புறுத்தினர் என்பதும், பில்லி சூனியம் ஆகியவற்றின் மூலம் வாதியையும் அவரது குடும்பத்தாரையும் பாதிக்கும் வகையில் நடக்கப்போவதாக வாதியை மிரட்டியது பொய் என்றும், மந்திரவாதிகளை வீட்டிற்கு அழைத்து வந்து அவர்களுக்கு உணவு பரிமாறிச் சொல்லி வாதியை வற்புறுத்தியது பொய் என்றும், அவர்களுக்கு கால் அமுக்கி விடும்படி தெரிவித்தது பொய் என்றும், பிரதிவாதியால் மறுக்கப்பட்டுள்ளது. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இருந்த இல்லரத்தின் பயனாக வாதியானது கர்ப்பம் தரித்தார் என்பது உண்மை என்றும், ஆனால் வாதி கர்ப்பம் தரித்த பின்பு பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் வாதியை அளவுக்கு அதிகமாக கொடுமை செய்தனர் என்பது பொய் என மறுக்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது.

**6.5.** மேலும் கடந்த 03.12.2022 ம் தேதி வாதி அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்பது மட்டும் உண்மை என்றும், வாதி நான்கு மாத கர்ப்பிணியாக அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றார் என்பது உண்மை என்றும், வாதிக்கு கடந்த 10.06.2023 ம் தேதி அன்று ஆலியா என்ற பெண் குழந்தை பிறந்தது என்பது உண்மை என்றும், மேலும் வாதி அவருக்கு நிகழ்ந்த கொடுமைகள் குறித்து விருதுநகர் மாவட்ட சமூக நல அலுவலர் அவர்கள் வசம் கடந்த 03.08.2023 ம்


PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

தேதியன்று ஒரு புகார் மனு வழங்கினார் என்பது உண்மை என்றும், மேற்படி மனுவானது வாதியின் தந்தை மற்றும் சகோதரியின் தூண்டுதலின் பெயரில் மோசடியாக அளிக்கப்பட்ட புகார் என்றும், வாதி பிரதிவாதி வசம் இருந்த நகைகள், சீர்வரிசை பொருட்கள் ஆகியவற்றை பெற்று தருமாறு கோரி சிவகாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 22.01.2024 ம் தேதி புகார் செய்தது உண்மை என்றும், மேற்படி புகாரின் விசாரணைக்கு ஆஜரான பிரதிவாதி வாதிக்கு பாதியப்பட்ட நகைகளையும், துணிகளையும் காவல் நிலையத்தில் வைத்து வாதி வசம் கடந்த 23.01.2024 ம் தேதி அன்று வழங்கிவிட்டார் என்றும், வாதிக்கு சொந்தமான கட்டில், மெத்தை, பீரோ ஆகியவை மற்றும் பிரதிவாதியிடம் உள்ளது என்றும், பண்ட பாத்திரங்கள் ஏதும் வாதிக்கு சீதனமாக வழங்கப்படவில்லை என்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் திருமணம் முடிந்த பின்பு பிரதிவாதி வாதியின் மீது அளவுக்கு கடந்த அன்பும், பாசமும் கொண்டிருந்தார் என்றும், பிரதிவாதியின் பெற்றோர்களும் வாதியின் மீது பாசம் கொண்டிருந்தனர் என்றும், பிரதிவாதியின் சகோதரியான ரேஷ்மா அவர்களும் வாதி மீது அன்போடும் பாசத்துடனும் நடந்து கொள்வார் என்றும் எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**6.6.** திருமணம் முடிந்து வாதி மீது கொண்ட பாசம் காரணமாக பிரதிவாதி வாதியை பல இடங்களுக்கு இன்பச் சுற்றுலா அழைத்துச் சென்றார் என்றும், வாதி திருமணமான நாள் முதலே பிரதிவாதியின் வீட்டில் வேலை எதுவும் செய்யாமல் அலைபேசியில் எப்போதும் பேசிக்கொண்டே இருப்பார் என்றும், பிரதிவாதிக்கு செய்ய வேண்டிய எந்தவொரு அடிப்படை கடமையும் வாதி செய்தது கிடையாது என்றும், இருந்தபோதும் பிரதிவாதியோ அவரது பெற்றோரோ வாதியை குறை கூறியது கிடையாது என்றும், வாதியின் மனம் நோக நோகுமாறு பேசியதும் கிடையாது என்றும், வாதி கர்ப்பம் தரித்தவுடன் வாதியை பிரதிவாதி சிவகாசி மேனகா மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு பலமுறை அழைத்துச் சென்றுள்ளார் என்றும், வாதி கேட்கும் பொருட்களையெல்லாம் பிரதிவாதி வாங்கியும் கொடுத்துள்ளார் என்றும், ஆனால் வாதியோ


PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

பிரதிவாதி மீது பாசம் இல்லாமல் வெறும் பெயரளவிற்கு மட்டும் அவருடன் வாழ்ந்து வந்தார் என்றும் எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வாதி கடந்த 2022ம் ஆண்டு நவம்பர் மாத இறுதியில் அவரது தந்தையுடன் மருத்துவமனைக்கு செல்ல போவதாக தெரிவித்ததாகவும், பிரதிவாதி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்காக கேட்டதற்கு வாதி வர மறுத்துவிட்டார் என்றும், அவ்வாறு அவரது தந்தையுடன் மருத்துவமனைக்கு சென்று வந்த பிறகு வாதி பிரதிவாதியையும் பிரதிவாதியின் பெற்றோரையும் சிறிதும் மதிக்காமல் நடந்து வந்ததாகவும், மேலும் கடந்த 03.12.2022ம் தேதியன்று வாதியின் தந்தை வாதியை ஓய்வுக்காக என்று கூறி அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றார் என்றும், அவ்வாறு சென்ற பின்பு வாதியை பிரதிவாதி தொலைபேசியில் தொடர்பு கொள்ள எவ்வளவோ முயன்ற போதும் வாதி பிரதிவாதியுடன் பேச முன்வரவில்லை என்றும், நேரில் சென்று வாதியை சந்திப்பதற்கு பிரதிவாதி முயன்ற போதும் அவரால் சந்திக்க முடியவில்லை என்றும், பிரதிவாதி வாதியின் தந்தையை தொடர்பு கொண்டதற்கும் வாதியின் தந்தை பிரதிவாதியை ஏளனமாக பேசினார் என்றும் வாதிக்கு குழந்தை பிறந்த விபரத்தை கூட பிரதிவாதிக்கோ அவரது குடும்பத்தினருக்கோ வாதியின் குடும்பத்தினரால் தெரிவிக்கவில்லை என்றும், இருப்பினும் குழந்தை பிறந்த விபரம் அறிந்த பின்பு குழந்தையையும் வாதியையும் பார்ப்பதற்காக பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் சென்றதற்கு வாதியின் பெற்றோர் அவர்களை அனுமதிக்கவில்லை என்றும், அதன்பிறகும் பிரதிவாதியால் வாதி மற்றும் குழந்தையை பார்ப்பதற்கு முயற்சி செய்தபோதும் வாதியின் குடும்பத்தார் குழந்தையை காண்பிக்க மறுத்துவிட்டனர் என்றும், வாதியின் தந்தை பிரதிவாதியிடம் மாதம்தோறும் அவருக்கு ரூ.15000/-ஐ பிரதிவாதி வழங்கும் பட்சத்தில் வாதியை பிரதிவாதியின் வீட்டிற்கு அனுப்பி வைப்பதாக அலைபேசியில் தெரிவித்ததாகவும், அதனை கேட்ட அதிர்ச்சி அடைந்த பிரதிவாதி வாதியின் தந்தைக்கு பணம் கொடுக்க முடியாது என மறுத்துவிட்டார் என்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

**6.7.** வாதியின் தந்தை வாதியை தூண்டிவிட்டு விருதுநகர் சமூகநல அலுவலர் அவர்கள் வசம் வாதி பொய்யான ஒரு மனுவை அளித்தார் என்றும், மேற்படி மனுவில் ஆஜரான பிரதிவாதி அவரது தரப்பு விளக்கத்தை எழுத்து மூலமாக தெரிவித்தார் என்றும், மேற்படி விளக்கத்தில் வாதியின் தந்தை பிரதிவாதியிடம் ரூ.15,000/- கோரியது தொடர்பான விபரத்தை தெரிவித்துள்ளார் என்றும், மேலும் பிரதிவாதி வாதியுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்ற விபரத்தையும் மேற்படி மனுவில் தெரிவித்ததாகவும், மேற்படி மனு நிலுவையில் இருந்த சமயத்திலேயும் பிரதிவாதி வாதியுடன் சேர்ந்து வாழ்வதற்காக முயற்சிகள் மேற்கொண்டார் என்றும், ஆனால் வாதி தரப்பில் பேச்சுவார்த்தைக்கு முன்வரவில்லை என்றும், வாதி சிவகாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பிரதிவாதி மீது புகார் செய்தார் என்றும், மேற்படி புகாரில் ஆஜரான பிரதிவாதி அப்பொழுதும் தான் வாதியுடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதை தெரிவித்தார் என்றும், ஆனால் பிரதிவாதி வீட்டில் உள்ள வாதியின் நகைகளை ஒப்படிற்குமாறு வாதியும் அவரது பெற்றோரும் கோரினார்கள் என்றும், அதற்கு எந்தவித மறுப்பும் தெரிவிக்காமல் பிரதிவாதி மேற்படி நகைகளை ஒப்படித்து விட்டார் என்றும், வாதிக்கு சொந்தமான கட்டில், மெத்தை, பீரோ ஆகியவற்றை வாதியின் தந்தை கேட்டார் என்றும், அதனை எப்போது வேண்டுமானாலும் எடுத்து செல்லுமாறு பிரதிவாதி தெரிவித்ததாகவும் எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதி அவரையும் வாதிகளையும் சேர்த்து வைக்க கோரி ஜமாத்தில் முறையிட்டதாகவும், ஜமாத்தார்கள் சமரச பேச்சுவார்த்தைக்கு வாதிகளையும் அவரது தந்தையையும் அழைத்த போதும் சமரச பேச்சுக்கு வரமறுத்து பொய்யான சங்கதிகளை கூறி வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், பிரதிவாதி வாதியுடன் சேர்ந்து வாழ எப்போதும் தயாராகவே உள்ளார் என்றும், வாதிக்கு விவாகரத்து வழங்க பிரதிவாதிக்கு சிறிதும் உடன்பாடு கிடையாது என்றும், திருமணத்தின்போது வாதிக்கு வழங்கப்பட்ட மஹர் வாதியின் வசம் இருந்து வருகிறது என்றும், வாதி மற்றும் பிரதிவாதி இடையேயான திருமண


PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் பிரதிவாதியால் அவரது எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ளது.

**6.8.** வாதி இவ்வழக்கின் வாயிலாக இஸ்லாமிய முறைப்படி வாதிகும் பிரதிவாதிக்கும் கடந்த 15.05.2022 ம் தேதியன்று சிவகாசி பிலால் திருமண மஹாலில் வைத்து நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து உத்தரவிடக் கோரி விளம்புகைப் பரகாரம் கோரியுள்ளார். வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதியின் ஆதார் கார்டு வா.சா.ஆ.1 ஆகவும், வாதி, பிரதிவாதியின் திருமணத்திற்கான அழைப்பிதழ் வா.சா.ஆ.2 ஆகவும், வாதிக்கும், பிரதிவாதிக்கும் பிறந்த குந்தையான ஆலியா பிறப்பு பதிவு சான்றிதழ் வா.சா.ஆ.3 ஆகவும், விருதுநகர் மாவட்ட சமூக நல அலுவலர் அவர்கள் வசம் வாதியால் கொடுக்கப்பட்ட புகார் மனு வா.சா.ஆ.4 ஆகவும், பிரதிவாதி மீது வாதி சிவகாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்வதற்கான மனு ரசீது எண்.56/2024 வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1 ஆனது வாதியினால் விருதுநகர் சமூகநல அலுவலர் வசம் வழங்கப்பட்ட புகார் மனுவிற்கு பிரதிவாதி எழுத்து மூலமாக தெரிவித்த பதில் விளக்கம் ஆகும். இருதரப்பிலும் வாதிக்கும் பிரதிவாதிக்கும் கடந்த 15.05.2022 ம் தேதியன்று சிவகாசி நேரு ரஸ்தாவில் உள்ள பிலால் மஹாலில் வைத்து இரு வீட்டு பெரியோர்கள், உற்றார் உறவினர்கள் மற்றும் ஜமாத்தினர்கள் முன்னிலையில் இஸ்லாமிய முறைப்படி திருமணம் நடைபெற்றது என்பதும், மேற்படி திருமணமானது சிவகாசி சபாஸ்கான் கோரி பள்ளிவாசல் முஸ்லீம் ஹனபீ மதஹபு ஜமாத்தில் பதிவு செய்யப்பட்டது ஆகிய சங்கதிகளும் உண்மை என்று ஒப்புகொள்ளப்பட்டுள்ளது. மேற்படி திருமணத்திற்கு தொடர்பாக வா.சா.ஆ.2 ஆன திருமண அழைப்பிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளது.



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

**6.9.** வாதி அவரது வழக்கில் திருமணமான நாளிலிருந்து வாதியை பிரதிவாதியும் அவரது பெற்றோர்களும் மற்றும் பிரதிவாதியின் சகோதரியும் குறை கூறியும் வாதியை திட்டியும் உதாசீனப்படுத்தும் வகையில் நடத்தி வந்ததாகவும் வாதியை மாதவிடாய் காலத்திலும் சிறிதும் ஓய்வெடுக்க விடாமல் அதிகமாக வேலைகளை செய்ய செய்தனர் என்றும் பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் கேரளாவிலிருந்து மந்திரவாதிகளை வீட்டிற்கு அழைத்து ஒரு வாரம் தங்கவைத்து ஒரு பெண்ணிற்கு பேய் பிடித்திருப்பதாக கூறி அவருக்கு பேய் விரட்டுவதற்காக அந்த பெண்ணை அடித்து துன்புறுத்தினர் என்றும் மேற்படி மந்திரவாதிகளுக்கு உணவு சமைத்துக் கொடுக்குமாறும் அவர்களுக்கு காலம் அமுக்கி விடும்படியும் உணவு பரிமாற சொல்லியும் வாதியை பிரதிவாதியும் அவரது பெற்றோர்களும் கொடுமை செய்தனர் என்றும் அதற்கு வாதி மறுப்பு தெரிவித்தபோது பிரதிவாதியின் தாயார் வாதியின் மீது முட்டையை எறிந்தார் என்றும் வழக்குரையில் கூறியுள்ள நிலையில் வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் பிரதிவாதியும் அவரது பெற்றோர்களும் என்னை மதிக்காமலும் உதாசீனப்படுத்தி வந்தனர் என்றும் நான் பிராதில் கூறியவை அனைத்தும் உண்மை என்றும் எனது கணவர் மற்றும் அவரது பெற்றோர்கள் தர்காவிற்கு செல்வார்கள் அங்குள்ள மாந்திரீகர்களை வீட்டிற்கு அழைத்து வருவார்கள் மேற்படியாருக்கு என்னை சமைக்க சொல்லியும் கால் அமுக்க சொல்லியும் என்னை அடித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பி.வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் நான் அடிக்கடி தர்கா சென்று வழிபாடு செய்வேன் என்றால் சரிதான் தர்காவில் பேய் ஓட்டுவார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது தர்காவில் வழிபாடு நடத்தி வரும் பக்கீஷா என்ன சொன்னாலும் செய்வேன் என்றால் நான் மட்டுமல்ல ஊரில் உள்ள மற்றவர்களும் அவர் என்ன சொன்னாலும் கேட்பார்கள் அது ஊர் கட்டுப்பாடு ஆகும் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6.10.** மேலும் வாதி அவரது வழக்கில் பிரதிவாதி வாதிக்கு செய்ய வேண்டிய எந்த ஒரு அடிப்படை கடமைகளையும் செய்யவில்லை என்றும் வாதியை தனது தேவைக்கு மட்டும் பயன்படுத்திக்


PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

கொண்டு அதன்பின்பு மற்ற நேரங்களில் மனம் நோக பேசி வெறுத்து ஒதுக்கி வந்தார் என்றும் வாதி கர்ப்பம் தரித்த பின்பு பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் வாதிக்கு அளவுக்கு அதிகமான தொல்லைகள் கொடுக்க ஆரம்பித்தனர் என்றும் அதனால் வாதி தனக்கும் தனது குழந்தைக்கும் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என மிகவும் அஞ்சி வாழ்ந்து வந்தார் என்றும் வாதிக்கு காய்ச்சல் ஏற்பட்டு உடல்நலம் குன்றிய போது பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் வாதியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல் இரவு முழுவதும் வாதியை உட்கார வைத்து அவரது முகத்தில் தண்ணீர் அடித்து ஓதினார்கள் என்றும் வாதிக்கு காய்ச்சல் குறையாமல் அதிகமாகவே பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினரின் செய்கையால் வாதி அவரது உயிருக்கே ஆபத்து ஆகிவிடும் என அஞ்சி அவரது தந்தைக்கு தகவல் தெரிவித்ததாகவும் அதன்பின்பு வாதி அவரது தந்தையுடன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு மீண்டும் பிரதிவாதியின் வீட்டில் விட்டு சென்றார் என்றும் ஆனால் பிரதிவாதியும் அவரது குடும்பத்தினர் இங்கு நடந்த விவரங்களை வாதியின் தந்தையிடம் கூறியதற்கு வாதியை மிகவும் மதிப்பு குறைவாகவும் அவதூறாகவும் திட்டி அடித்து சாப்பாடு போடாமல் கொடுமைப்படுத்தினார்கள் என்றும் அதனால் உயிருக்கு பயந்து வாதி கடந்த 03.12.2022 ம் தேதியன்று பிரதிவாதியின் வீட்டிலிருந்து அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்று வழக்கில் கூறியுள்ள நிலையில் வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் நான் கர்ப்பமாக இருந்த காலத்தில் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது என்றால் சரிதான் என்றும் அப்போது எனது கணவர் என்னை மருத்துவமனைக்கு அழைத்த போது நான் வர மறுத்துவிட்டேன் என்றால் இல்லை என்றும் அதன்பின்பு எனது தந்தைக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து எனது தந்தையுடன் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான் என்றும் கடந்த 03.12.2022 ம் தேதி எனது கணவர் வீட்டிலிருந்து யாரிடமும் எதுவும் சொல்லாமல் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பி.வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் வாதி 2022 ம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதத்தில் வீட்டை



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

விட்டு சென்றுவிட்டார் என்றும் வாதி என்னைவிட்டு பிரிந்து சென்ற சமயத்தில் அவர் மூன்று மாத கர்ப்பமாக இருந்தார் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பி.வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் வாதியுடன் சேர்ந்து வாழ நான் காவல் நிலையத்திலேயோ அல்லது நீதிமன்றத்திலேயோ எதுவும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை நான் பள்ளிவாசலில் மனு செய்தேன் என்றும் மேற்படி மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் யாரிடம் மனு அளித்தேன் என்றால் தலைவர் அலிஷா மற்றும் செயலாளர் சையத் படேஷா ஆகியோரிடம் மனு கொடுத்ததாகவும் பிப்ரவரி 2023ம் ஆண்டு காலத்தில் மனு கொடுத்ததாகவும் மேற்படி தலைவர் மற்றும் செயலாளரை பிரதிவாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1ன் குறுக்கு விசாரணையின் போது எனக்கும் எனது கணவருக்கும் இடையே பிரச்சனை எதுவும் இல்லாததால் தான் ஜமாத்தில் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் முதலில் ஜமாத்தில் எனது கணவராகிய ரியாஜ் மனு கொடுத்திருந்தார் நான் விருதுநகர் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் மனு கொடுத்திருந்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். இதன்மூலம் வாதி மற்றும் பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற பிரச்சனை தொடர்பாக பிரதிவாதி ரியாஜால் ஜமாத்தில் மனு கொடுக்கப்பட்டது என்று வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனினும் மேற்படி நகல் இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி மனுவின் உள்ளடக்கம் குறித்து இருதரப்பிலும் எந்த விபரங்களும் தெரிவிக்கப்படவில்லை.

**6.11.** மேலும் வாதி அவரது வழக்கில் பிரதிவாதி வீட்டிலிருந்து உயிருக்கு பயந்து கடந்த 03.12.2022ம் தேதியன்று வாதி அவரது பெற்றோர் வீட்டிற்கு வந்த பிறகு பிரதிவாதி வாதியை அலைப்பேசியில் தொடர்பு கொண்டு நீ எவன் கூட சென்று விட்டாய் என்றும் மிகவும் அருவருக்கத்தக்க வார்த்தைகளாலும் ஆபாசமான வார்த்தைகளாலும் வாதையை மனம் நோகச்



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

செய்ததாகக் கூறியுள்ள நிலையில் அதன்தொடர்பாக வாதி வா.சா.ஆ.4 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வா.சா.அ.4 ஆவணமான மனுவில் வாதி மேற்படி விவரங்களைக் குறிப்பிட்டுள்ளார். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதிதான் பிரதிவாதியை மிகவும் மதிப்பு குறைவாக பேசி வந்தார் என்றும் மேற்படி சூழ்நிலையில் வாதியின் தந்தை கடந்த 03.12.2022 ம் தேதியன்று வாதியை ஓய்விற்காக என்று கூறி அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றார் என்றும் அதன்பின்பு பிரதிவாதி வாதியை தொடர்பு கொள்ள பலமுறை முயற்சி செய்தபோதும் பிரதிவாதியுடன் பேச வாதி முன்வரவில்லை என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையின் போது கடந்த 03.12.2022 ம் தேதி எனது கணவர் வீட்டிலிருந்து யாரிடமும் எதுவும் சொல்லாமல் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் என்ற கேள்விக்கு சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில் வாதி அவரது பெற்றோர் வீட்டிற்கு வந்த பிறகு வாதியின் தந்தை வாதியையும் பிரதிவாதியையும் சேர்த்து வைப்பதற்காக சுமுகமாக பேச முயற்சி செய்தார் என்றும் ஆனால் அது பயனளிக்கவில்லை என்றும் பிரதிவாதியின் வீட்டிலிருந்து வாதி நான்கு மாத கர்ப்பிணியாக பெற்றோர் வீட்டிற்கு வந்த பிறகு ஒருமுறை கூட பிரதிவாதியோ அவரது குடும்பத்தினரோ வாதியை வந்து பார்க்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி கூற்றைப் பொறுத்து பிரதிவாதி தரப்பில் குறிப்பாக மறுக்கப்பட்டு பிரதிவாதி தான் வாதியை தொடர்புகொள்ள முயற்சித்த போது வாதி தொடர்புகொள்ள முன்வரவில்லை என்றும் வாதியின் தந்தை பிரதிவாதியை மதிக்காமல் ஏளனமாக பேசியதாகவும் எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**6.12.** மேலும் பி.வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் பிரதிவாதி ஜமாத்தில் மனு கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிர்வழக்குரையில் பிரதிவாதி தன்னையும் வாதியையும் சேர்த்து வைக்கக் கோரி ஜமாத்தில் முறையிட்டதாகவும் ஜமாத்தார்கள் சமரச பேச்சுவார்த்தைக்கு வாதியையும் அவரது பெற்றோர்களையும் அழைத்தனர் என்றும் ஆனால் அவர்கள் சமரச



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

பேச்சுவார்த்தைக்கு வரமறுத்து பொய்யான காரணங்களைக்கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 10.06.2023 ம் தேதியன்று வாதிக்கு ஆலியா என்ற ஒரு பெண் குழந்தை பிறந்ததாக வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் வாதி அதன்தொடர்பாக வா.சா.ஆ.3 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார் மேற்படி வா.சா.ஆ.3 ஆவணமானது குழந்தை ஆலியாவின் பிறப்புச் சான்றிதழ் ஆகும். குழந்தை பிறந்த விபரத்தை பிரதிவாதிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தெரிவித்த பின்பும் கூட பிரதிவாதியோ அவரது குடும்பத்தினரோ வாதியையோ அவரது குழந்தையையோ வந்து பார்க்கவில்லை என்றும் குழந்தை பிறந்த பிறகு கடந்த 31.07.2023 ம் தேதியன்று வாதியின் பெற்றோரும் வாதியின் பெரியப்பா அபூபக்கர் அவர்களும் பிரதிவாதியின் வீட்டிற்குச் சென்று வாதியையும் பிரதிவாதியையும் சேர்த்து வைக்க சமாதானம் பேசினார்கள் என்றும் ஆனால் பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் மிகவும் இழிவாகப் பேசியதோடு மட்டுமல்லாமல் திட்டியதாக வழக்கில் கூறப்பட்டுள்ள நிலையில் மேற்படி கூற்றுக்கு ஆதரவாகவே வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.13** பிரதிவாதி தரப்பில் குழந்தை பிறந்த விபரத்தை பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தாரிடம் தெரிவிக்கவில்லை என்று எதிர்வழக்குரையில் கூறியுள்ள நிலையில் பி.வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் எனது மகளின் பெயர் என்னவென்றால் மகளின் பெயரை என்னிடம் தெரிவிக்கவில்லை என்றும் எனது மகள் என்ன வயது மற்றும் என்ன படிக்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது என்றும் பிறந்ததிலிருந்து எனது மகளை என்னிடம் காட்டவில்லை என்றும் மகளை பார்ப்பதற்கு மனு ஏதும் தாக்கல் செய்யப்பட்டதா என்ற கேள்விக்கு காவல் நிலையத்தில் 2024 ம் ஆண்டு மனு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி மனு பிரதிவாதி தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் மேற்படி மனுவின் மீதான விசாரணை குறித்த விவரங்களும் பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. வாதியினால் சமூகநல அலுவலர் அவர்களுக்கு கடந்த 03.08.2023 ம் தேதி மனுவானது அளிக்கப்பட்டுள்ளது.



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

பிரதிவாதி தரப்பில் மேற்படி மனுவிற்கான பதில் கடந்த 15.09.2023 ம் தேதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணமான பிரதிவாதியின் தரப்பு பதிலுரையில் குழந்தை பிறந்தவுடன் சொல்லவில்லை என்றும் எங்களுக்கு புருஷன் பொண்டாட்டி சண்டை எதுவும் இல்லை மாமியார் மாமனார் பேசுவதுதான் பிரச்சினை என்றும் என் மனைவி எனக்கு வேண்டும் என்றும் ஊர் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட சாபாஷ்கான் கோரி பள்ளிவாசலில் நடக்கும் மவுளத்செரிப்க்கு வரும் பெரியவர்கள் எங்கள் வீட்டில் வந்து இருந்து உணவு அருந்துவதற்கும் தங்கி திரும்பி செல்வதற்கும் எங்களுக்கு அனுமதி உண்டு என்றும் இதை காரணம் காட்டுவது தவறு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**6.14.** மேலும் வா.சா.ஆ.4 ஆவணமான வாதியின் மனுவில் பிரதிவாதி வாதியையும் அவரது குழந்தையையும் பராமரிக்க பிரதிவாதிக்கு கடமை உள்ளது என்றும் ஆனால் அவர் வேண்டுமென்றே பராமரிக்காமல் புறக்கணித்து வருகிறார் என்றும் வாதிக்கும் குழந்தைக்கும் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவச் செலவு மற்றும் இதர பராமரிப்புக்காக மாதம் ஒன்றிற்கு ரூ.50,000/- தேவைப்படுகிறது என்றும் பிரதிவாதி அவரது பெற்றோர் மற்றும் சகோதரி ஆகியோர் வாதியை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சித்திரவதைக்கு உட்படுத்தியதற்கு இழப்பீடு பெற்று தர வேண்டும் என்றும் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியும் மற்றும் பிரதிவாதி வீட்டில் குடியிருப்பதற்குண்டான ஆணையை பெற வேண்டிய நிலையிலும் இருப்பதாக வாதி மேற்படி மனுவில் தெரிவித்துள்ளார். இவ்வாறாக வாதி பிரதிவாதி வீட்டில் அவருடன் சேர்ந்து வசிப்பதற்கான குடியிருப்பதற்குமான உரிமையை பெற்றுத்தரக் கோரி ஆணை ஒன்றை பிறப்பிக்க வேண்டியுள்ளார். ஆனால் பி.வா.சா.1 ஆவணமான பிரதிவாதி தரப்பு பதிலுரையில் மேற்படி சங்கதிக்கு தொடர்பாக எந்தவித பதிலும் தெரிவிக்கப்படவில்லை. வாதி கடந்த 22.1.2024 ம் தேதியன்று சிவகாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பிரதிவாதியிடமிருந்து அவருக்கு பாத்தியப்பட்ட நகைகள், சீர்வரிசைப் பொருட்களை பெற்றுத் தருமாறு மனு தாக்கல்


PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

செய்துள்ளதாகக் கூறியுள்ள நிலையில் அதன்தொடர்பாக வா.சா.ஆ.5 ஆவணமான மேற்படி மனுவின் ரசீது வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்தொடர்பாக வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் மேற்படி புகார் கொடுத்த விவரத்தை ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் பிரதிவாதியிடமிருந்து வாதி அவரது நகைகளை திரும்ப பெற்றுக் கொண்டதாகவும் வாதிக்கு கொடுக்கப்பட்ட மஹர் நகைகளை பிரதிவாதி வாங்கிக் கொண்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.15.** வாதி அவரது வழக்கில் பிரதிவாதி வாதியையும் அவரது குழந்தையும் பராமரிக்க தவறியுள்ளார் என்றும் அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்ய தவறியுள்ளார் என்றும் கூறியுள்ளார். பிரதிவாதி அவரது எதிர்வழக்குரையில் வாதியின் தந்தை மாதம் தோறும் ரூ.15,000/- பிரதிவாதி வழங்கும் பட்சத்தில் வாதியை பிரதிவாதியின் வீட்டிற்கு அனுப்பி வைப்பதாக கூறியதாக கூறியுள்ளார். அதற்கு பிரதிவாதி வாதியின் தந்தை கோரிய பணத்தை வழங்க முடியாது என்றும் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் பி.வா.சா.ஆ.1 ஆவணமான பிரதிவாதியின் தரப்பில் பதிலுரையிலும் வாதியின் தந்தை ரூ.5,000/- மாதாமாதம் பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார் என்றும் அதிலிருந்து பிரதிவாதி அவர் வீட்டு பக்கம் போகவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். பி.வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் எனது மனைவி மற்றும் மகளின் பராமரிப்புக்காக நாளது தேதி வரை நான் ஏதேனும் உதவி செய்தேனா என்றால் வாதியின் தந்தையிடம் நான் பராமரிப்பு தொகை கொடுத்தேன் என்றும் மேற்படி பராமரிப்பு தொகையை டி.டியாக கொடுத்தேன் என்றும் அதனை வாதி வாங்க மறுத்துவிட்டார் என்றும் இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பும் ரொக்கமாகவே பணம் கொடுத்தேன் என்றும் மேலும் எனது மகளுக்கு மகளிர் காவல் நிலையத்தில் வைத்து இரண்டு பவுன் தங்க நகை கொடுத்தேன் என்றும் எதிர்வழக்குரையில் தெரிவிக்காத புதிய சங்கதிகளையும் எதிர்வழக்குரை மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தெரிவித்த சங்கதிகளுக்கு முரணாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் பி.வா.சா.1 அவரது குறுக்கு



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

விசாரணையில் எந்த தேதியில் டி.டி. கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை என்றும் ஆனால் நோட்டில் எழுதி வைத்துள்ளேன் என்றும் மேற்படி நோட்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் தயாராக இருப்பதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.16.** வாதி தரப்பு வழக்கில் வாதியை பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் வாய்மொழியாக திட்டியும் மனரீதியாக துன்புறுத்தினர் என்றும் மேலும் அடித்து உடல் ரீதியாகவும் துண்புறுத்தினர் என்றும் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கினர் என்றும் வாதியை சரிவர கவனிக்கவில்லை என்றும் வாதி கர்ப்பணியாக பிரதிவாதியின் வீட்டை விட்டு சென்ற பிறகும் பிரதிவாதியும் அவரது குடும்பத்தாரும் வாதியை வந்து பார்க்கவில்லை என்றும் குழந்தை பிறந்த விபரம் தெரிவித்த பின்பும் குழந்தையை பிரதிவாதியோ அவரது குடும்பத்தினரோ வந்து பார்க்கவில்லை என்றும் வாதி குடும்பத்தார் வாதி மற்றும் பிரதிவாதி சேர்ந்து வாழ்வதற்காக பல்வேறு முயற்சிகள் செய்த பின்பும் பிரதிவாதிகள் தரப்பில் முன்வரவில்லை என்றும் வாதி தரப்பில் கொடுக்கப்பட்ட மனுவான வா.சா.ஆ.4 ஆவணத்திலும் வாதி பிரதிவாதியின் வீட்டில் குடியிருப்பதற்கான உரிமையை பெற்றுத்தர ஆணை பிறப்பிக்கக் கோரி வேண்டியுள்ளார் என்றும் வாதியின் நகைகளை பிரதிவாதி தர மறுப்பதினால் வாதியினால் சிவகாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு மேற்படி புகாரின் அடிப்படையில் வாதியின் நகைகள் திரும்பப் பெறப்பட்டது என்றும் பிரதிவாதியும் அவரது குடும்பத்தார் வாதியை பல்வேறு கொடுமைகள் செய்ததாலும் வாதியையும் அவரது குழந்தையும் பராமரிக்க தவறியதாலும் வாதியினால் இவ்வழகானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வா.சா.1ன் சாட்சியமும் அவரது வழக்கிற்கு ஆதரவாகவே அமையப்பெற்றுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி வாதியுடன் சேர்ந்து வாழ பல்வேறு முயற்சிகள் செய்தார் என்றும் குழந்தை பிறந்த விபரத்தை கூட பிரதிவாதியிடம் தெரிவிக்கவில்லை என்றும் தற்போதும் பிரதிவாதி வாதியுடன் சேர்ந்து வாழ தயாராகத்தான் உள்ளார் என்றும் மேலும் வாதிக்கும் குழந்தைக்குமான பராமரிப்பு தொகையினை வாதியினுடைய தந்தையிடம் கொடுத்ததாகவும்



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் பிரதிவாதி அவரது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி வாதியின் தந்தை கோரிய தொகை ரூ.15,000/- தர இயலாது என்று தெரிவித்ததாக தான் கூறியுள்ளார். வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் தற்போதும் கூட பிரதிவாதி என்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு தயாராகத்தான் உள்ளார் என்றால் சரியல்ல இவ்வழக்கின் பிரதிவாதியாகிய எனது கணவர் ரியாஜ் என்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு விருப்பமில்லை என்றும் என்னை எங்கேயும் போய் சேர்த்துவிடு என்று கூறினார் என்றும் தற்போது வழக்கிற்காக என்னுடன் சேர்ந்து வாழ்வதற்காக தயாராக உள்ளார் என்று பொய்யாக கூறுகிறார் என்றும் பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ எனக்கு விருப்பமில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.17.** இவ்வாறாக இருதரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், வாதி கூறுவது போல், வாதியை பிரதிவாதியும் அவரது குடும்பத்தார் கொடுமை செய்ததால்தான், வாதி கற்பிணியாக இருந்த சமயத்தில், பிரதிவாதியின் வீட்டை விட்டு வெளியேறி அவரது பெற்றோரின் வீட்டில் வசித்து வருகிறார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை இருந்தது தொடர்பாக வாதி தரப்பில் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறாக வாதி அவரது வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்தும், அதற்கு ஆதரவாக ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி வாதியுடன் சேர்ந்து வாழ்வதற்கும், குழந்தையை பராமரிப்பதற்கும் பல்வேறு முயற்சிகள் செய்ததாகவும் ஆனால் வாதிதான் ஒத்துழைக்கவில்லை என்று வழக்கில் கூறியுள்ளார். ஆனால், மேற்படி கூற்றுக்கு ஆதரவாக பிரதிவாதி தரப்பில் பிரதிவாதியைத் தவிர எந்தவித சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை, எந்தவித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதி அவரது தரப்பு சாட்சியாக பள்ளிவாசல் தலைவர் மற்றும் செயலாளரை விசாரிக்க தயாராக உள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். எனினும் அவர், அவரது தரப்பு



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

சாட்சியாக வேறு யாரையும் விசாரிக்கவில்லை. மேலும் பராமரிப்பு தொகை கொடுக்கவில்லை என்று எதிர்வழக்குரையில் மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆவணங்களை தெரிவித்துவிட்டு, குறுக்கு விசாரணையின் போது சாட்சியத்தில் பிரதிவாதி வாதியின் தந்தையிடம் தொகை கொடுத்ததாகவும், இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பும் பராமரிப்பு தொகை கொடுத்ததாகவும், அதன்தொடர்பாக விபரங்களை ஒரு நோட்டில் எழுதி வைத்துள்ளதாகவும், அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளதாகவும் எதிர்வாக்குரையில் தெரிவித்த சங்கதிகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார். மேலும் வா.சா.ஆ.4 ஆவணமான வாதி தரப்பில் அளிக்கப்பட்ட மனுவில் வாதி, பிரதிவாதியின் வீட்டில் வசிப்பதற்கான குடியுரிமைக்கான உரிமையை வழங்கும்படி வேண்டியுள்ளார். மேற்படி மனுவிற்கு பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் பதிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், பிரதிவாதி அவரது வீட்டிற்கு மீண்டும் வாதியை அழைத்து வந்து சேர்ந்து வாழ்வதற்கு, அவரால் என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்ற விபரங்கள் மேற்படி பதிலில் தெரிவிக்கப்படவில்லை. பிரதிவாதி வாதியுடன் சேர்ந்து வாழ்வதற்கும், அவரது குழந்தையை சந்திப்பதற்கும் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்ததாக சாட்சியத்தில் கூறியுள்ள நிலையில், அதன்தொடர்பாக பிரதிவாதி தரப்பில் எந்தவித ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, மேற்கூறியவற்றின் அடிப்படையில் பிரதிவாதி வாதியையும், அவரது குழந்தையையும் சரிவர பராமரிக்க தவறியுள்ளார் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**6.18.** பிரதிவாதி வாதியுடன் சேர்ந்து வாழ்வதற்கு விருப்பம் தெரிவித்தாலும், வாதி பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ்வதற்கு விருப்பமில்லை என்று சாட்சியம் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் இஸ்லாமிய திருமண கலைப்பு சட்டம் 1939 பிரிவு viii அ உ பரிகாரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சட்டப்பிரிவானது மேற்படி சட்டத்தின் ஒரு பகுதி அல்ல. இஸ்லாமிய திருமண கலைப்பு சட்டம் 1939 பிரிவு 2 ஆனது மேற்படி திருமணத்தை கலைத்து, அதன்தொடர்பான தீர்மானத்தை பெறுவதற்கான காரணங்களை தெரிவிக்கிறது


PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

அல்லது எதன்படி அடிப்படையில் ஒரு இஸ்லாமிய திருமணத்தை கலைத்து தீர்ப்பாணை பெறலாம் என்பது குறித்த விவரங்களை தெரிவிக்கிறது. பிரிவு 2 பின்வருமாறு,

**திருமண முறிவுத் தீர்ப்பிற்கான காரணங்கள்.**

இஸ்லாமிய சட்டத்தின் கீழ் திருமணம் செய்துகொண்ட ஒரு பெண், பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்களின் அடிப்படையில் தனது திருமணத்தை ரத்து செய்வதற்கான தீர்ப்பைப் பெற உரிமை உடையவராவார், அதாவது:—

(i) கடந்த நான்கு ஆண்டுகளாக கணவரின் இருப்பிடம் தெரியவில்லை;

(ii) கணவன் இரண்டு ஆண்டுகளாக அவளுக்கு ஜீவனாம்சம் வழங்குவதைப் புறக்கணித்திருக்கிறார் அல்லது தவறியிருக்கிறார்;

(iii) கணவருக்கு ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது;

(iv) கணவன், நியாயமான காரணமின்றி, கடந்த மூன்று ஆண்டுகளாகத் தனது திருமணக் கடமைகளை நிறைவேற்றத் தவறியுள்ளார்;

(வி) திருமணத்தின் போது கணவன் ஆண்மையற்றவனாக இருந்தார், தற்போதும் அவ்வாறே தொடர்கிறான்;

(vi) கணவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக மனநலக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கிறார் அல்லது கடுமையான பால்வினை நோயால் அவதிப்படுகிறார்;

(vii) அவள், பதினைந்து வயதை அடைவதற்கு முன்பே தன் தந்தையாலோ அல்லது பிற பாதுகாவலராலோ திருமணம் செய்து கொடுக்கப்பட்டு, பதினெட்டு வயதை அடைவதற்கு முன்பே அத்திருமணத்தை நிராகரித்தாள்:

திருமணம் முழுமையடையாத பட்சத்தில்;

(viii) கணவன் அவளைக் கொடுமையாக நடத்துகிறான், அதாவது,—



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

(அ) அத்தகைய நடத்தை உடல்ரீதியான துன்புறுத்தலாக அமையாவிட்டாலும், வழக்கமாக அவளைத் தாக்குவது அல்லது கொடுமையான நடத்தையால் அவளது வாழ்க்கையைத் துன்பமயமாக்குவது, அல்லது

(ஆ) தீய பெயர் பெற்ற பெண்களுடன் தொடர்பு கொள்கிறான் அல்லது இழிவான வாழ்க்கை வாழ்கிறான், அல்லது

(சி) அவளை ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ நிர்பந்திக்கும் முயற்சிகள், அல்லது

(ஈ) அவளுடைய சொத்தை அப்புறப்படுத்துகிறார் அல்லது அதன் மீதான அவளுடைய சட்டப்பூர்வ உரிமைகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கிறார், அல்லது

(இ) அவள் தனது மத நம்பிக்கையையோ அல்லது நடைமுறையையோ கடைப்பிடிப்பதற்குத் தடையாக இருப்பது, அல்லது

(எஃப்) ஒருவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்து, அவன் குர்ஆனின் கட்டளைகளுக்கு இணங்க அவளைச் சமமாக நடத்தவில்லை என்றால்;

(ix) இஸ்லாமிய சட்டத்தின் கீழ் திருமண முறிவுக்குச் செல்லுபடியாகக்கூடியதாக அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் காரணத்தின் பேரில்; ஆகும்.

வாதிகள் தரப்பில் பிராதில் தெரிவிக்கப்பட்டுள்ள அ மற்றும் உ பரிகாரங்கள் இவ்வழக்கின் சங்கதிகளுக்கு தொடர்பற்றவையாகும். வாதி இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அடிப்படையில் திருமணத்தை கலைத்திட பிரிவு 2 ல் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்களைத் தெரிவிக்க வேண்டும். வாதியின் வழக்கின் அடிப்படையில் மேற்படி சட்டத்தின் பிரிவு 2 ஆ மற்றும் ஏ காரணிகள் வாதி அவரது வழக்கில் தெரிவித்த சங்கதிகளுடன் ஒத்துப்போகிறது. தவறான சட்டப்பிரிவுகளை குறிப்பிடுவது வழக்கிற்கு பாதகமாக அமையாது என்பதை கருத்தில் கொண்டும் இவ்வழக்கானது நிலைநிற்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் 1ம் எழுவினாவிற்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

**7. <u>2 ம் எழுவினா பேரிலான தீர்வு-</u>**

இஸ்லாமிய திருமண கலைப்பு சட்டம் 1939 பிரிவு 2, ஆ காரணமானது கணவர் இரண்டு ஆண்டுகளாக ஜீவனாம்சம் வழங்குவதை புறக்கணித்திருக்கிறார் அல்லது தவறியிருக்கிறார். ஏ காரணியானது கணவர் மனைவியை கொடுமை செய்துள்ளார். மேலும் உட்பிரிவு அ வில் அத்தகைய நடத்தை உடல் ரீதியாக துன்புறுத்தலாக அமையாவிட்டாலும் வழக்கமாக அவளை தாக்குவது அல்லது கொடுமையான நடத்தைவால் அவளுக்கு வாழ்க்கையை துன்பமயமாக்குவது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் பிரதிவாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் அடிப்படையில் வாதியை பிரதிவாதி துன்புறுத்தி கொடுமை செய்துள்ளார் என்று இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ள நிலையிலும், வாதி பிரதிவாதியின் வீட்டிலிருந்து கடந்த 03.12.2022 ம் தேதியன்று, அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்ற பின்னும் தற்போது வரை பிரதிவாதி வாதிக்கு பராமரிப்பு தொகை வழங்கவில்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ள நிலையிலும், தவறான சட்டப்பிரிவுகளை குறிப்பிடுவது வழக்கிற்கு பாதகமாக அமையாது என்பதை கருத்தில் கொண்டும் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையேயான திருமணத்தை கலைத்து விளம்புகை செய்திட போதுமான காரணங்கள் அமைந்துள்ளன என்று இந்நீதிமன்றம் 2 ம் எழுவினாவிற்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.

**8. <u>3 ம் எழுவினா பேரிலான தீர்வு-</u>**

ஒன்று மற்றும் இரண்டு எழுவினாக்கள் வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையேயான திருமணத்தை கலைத்து விளம்புகை செய்ய வாதி கோரிய விளம்புகை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் 3 ம் எழுவினாவிற்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.



PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

**9. 4 ம் எழுவினா பேரிலான தீர்வு-**

1 முதல் 3 எழுவினாக்கள் வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் இதர பரிகாரங்கள் எதும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் 4ம் எழுவினாவிற்கு வாதிக்கு எதிராக தீர்வு காண்கிறது.

**10. இறுதி முடிவு**

இறுதியாக வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு வாதிக்கும், பிரதிவாதிக்கும் கடந்த 15.05.2022 ம் தேதி நடைபெற்ற திருமணம் ரத்து செய்யப்பட்டு விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிவகாசி.

**சாட்சி மற்றும் சான்றாவணங்கள்-**

**வாதி தரப்பு சாட்சிகள் -**

வா.சா.1 - அஞ்ஜும்செய்யது

**வாதி தரப்பு சான்றாவணங்கள்-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | | வாதியின் ஆதார் கார்டு - அசலுடன் ஒப்பிட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | 15.05.2022 | வாதி, பிரதிவாதியின் திருமணத்திற்கான அழைப்பிதழ் - அசல். |
| வா.சா.ஆ.3 | 10.06.2023 | வாதிக்கும், பிரதிவாதிக்கும் பிறந்த குந்தையான ஆலியா பிறப்பு பதிவு சான்றிதழ் - அசலுடன் ஒப்பிடப்பட்டு நகல். |
| வா.சா.ஆ.4 | 03.08.2023 | விருதுநகர் மாவட்ட சமூக நல அலுவலர் அவர்கள் வசம் வாதியால் கொடுக்கப்பட்ட புகார் மனு - உண்மை நகல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 22.01.2024 | பிரதிவாதி மீது வாதி சிவகாசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்ததற்கான மனு ரசீது எண்.56/2024 - அசல். |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி-</u>** ரியாஜ்

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்-</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 15.09.2023 | வாதியினால் விருதுநகர் சமூகநல அலுவலர் வசம் வழங்கப்பட்ட புகார் மனுவிற்கு பிரதிவாதி எழுத்து மூலமாக தெரிவித்த பதில் விளக்கம் - உண்மை நகல். |

PAVITHRA RAJAM Digitally signed by PAVITHRA RAJAM

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிவகாசி.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

சிவகாசி

அ.வ.எண்.20/2024

நேரிய/வரைவு தீர்ப்புரை

நாள் - 28.07.2026.